Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.803/2025

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.திருப்பதி | Occupation | தலைமை காவலர் |
| Father's name | சுந்தரராஜன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2026.

10.07.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நாள் மம்சாபுரம் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.05.2025 ம் தேதி 11.30 மணிக்கு மம்சாபுரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் பாரதிராஜா அவர்களுடன் நானும், திரு விஜயகுமார் முநிகா 3711 என்பவரும் மம்சாபுரம் நிலைய எல்லைக்குள் மதுவிலக்கு வழக்கு குற்றங்கள் சம்மந்தமாக ரோந்து சுற்றி கண்காணித்து மம்சாபுரம், கருக்குத்தோப்பு பண்ணை அருகில் வருமபோது பின்னால் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்த மம்சாபுரம் மீனாட்சி தோட்டத்தெருவை சேர்ந்த பன்னீர்செல்வம் மகள் ரஞ்சீத் வயது 24/2025 என்பவர் ஒரு பனைமரத்திலிருந்து 5 லிட்டர் நீல திற பிளாஸ்டிக் குடத்துடன் இறங்கிக் கொண்டிருந்தவரை சுற்றி வளைத்து நிறுத்தி அவர் வைத்திருந்த பிளாஸ்டிக் குடத்தை பார்க்க அதில் சுமார் 3 லிட்டர் அளவுக்கு புளித்த வாடையுடன் கூடிய பனங்கள் இருந்தது அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இறக்கிய குற்றத்திற்கு எதிரி ரஞ்சீத்தை கைது செய்தும், பனங்கள்ளை கைப்பற்றி இந்த இடத்திலேயே கொட்டி அழித்தும், குடத்தை உடைத்தும் எதிரி ரஞ்சீத்தை நிலையம் கொண்டு செல்ல தயாரிக்கலான அத்தாட்சியில் அந்த இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ்பார்ட்டியாகிய நாங்களே கையொப்பமிட்டு 12.30 மணிக்கு நிலையம் வந்து எதிரி

மீது வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தேன் இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும்அத்தாட்சியிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கு சம்பந்தமாக ரோந்து பணிக்கு மம்சாபுரம் காவல்நிலையத்திலிருந்து தான் நாங்கள் புறப்பட்டு சென்றோம் என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து மேற்படி கருக்குதோப்பு பண்ணையானது காவல் நிலையத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். கருக்குதோப்பு பண்ணை அருகில் உள்ள பகுதிகளில் 1000 த்திற்கும் மேற்பட்ட பனைமரங்கள் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரி குறிப்பாக எந்த மரத்திலிருந்து பனங்கள் இறக்கினார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாக கூறப்படும் மரத்தினை குறிப்பிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து பனைமரம் ஏற பயன்படுத்தும் கருவிகளான அருவாள், கால்தலை, போன்ற உபகரணங்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். பனங்கள்ளை கண்டுபிடிப்பதற்காக சிறப்பு பயிற்சிகள் எதுவும் நான் படிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நாங்கள் கைப்பற்றியதாக கூறப்படும் குடத்தினை புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சொத்துக்களை அழிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் ஆய்வாளர் சொன்னதன் பேரில் அழித்தோம். இவ்வழக்கின் அத்தாட்சி, முதல் தகவல் அறிக்கை மற்றும் எனது BNSS பிரிவு 180(3) வாக்குமூலத்திலும் ஆய்வாளர் சொன்னதன் பேரில் மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்களை அழித்தாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் உத்தரவின்பேரில் அழித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கருக்குதோப்பு பண்ணையில் சுமார் 20 குடும்பங்கள் வீடு அமைத்து வாழ்ந்து வருகிறார்கள். மேற்படி கருக்குதோப்பு பண்ணையின் தெற்கு பக்கமும் ஒரு கோவில் உள்ளது என்றால் சரிதான். எதிரியை கைது செய்த போது பனங்கள் இறக்கியதாக அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் தனிநபரிடம் கையெழுத்து பெறாமல், போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே சாட்சிகளாக கையெழுத்து

செய்துள்ளோம் என்றால் சரிதான். எதிரியை சோதனை செய்வதற்கு முன் நீதிமன்றத்திலோ அல்லது எங்களது மேல் அதிகாரிகளிடமோ எந்தவித உத்தரவும் பெறப்படவில்லை என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து பனங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றி சம்பவயிடத்திலேயே அழித்துவிட்டோம். மேற்படி 3 லிட்டர் பனங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்துவிட்டோம். தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் படி மேற்படி பனங்களை அழிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால், ஆய்வாளர் கூறியதன் பேரில் தான் அழித்தோம். உண்மையில் எதிரியிடமிருந்து பனங்கள்ளை கைப்பற்றியிருந்தால், அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றாலும், அவ்வாறு கைப்பற்றப்படாததால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றியவுடன் கொட்டி அழித்துவிட்டோம். எதிரி மீது புள்ளி விபரத்திற்காக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.